**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern
Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா. 25**
**Defence**
**Court**

Name : ராஜ்குமார்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 08.04.2022

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசியில், மலையான் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியாது. குமார்பாண்டியன் என்பவரை தெரியும். அவர் கொலை செய்யப்பட்டு இறந்ததாக கேள்விபட்டேன். நான் ரியல் எஸ்டேட் மீடியேட்டராக இருக்கிறேன். அதனால் தென்காசி புறநகர் பகுதியில் வீட்டடி மனைகள் விற்கும்

இடங்கள் பற்றி எனக்கு தெரியும். கேபிள் டிவீ போடுபவர்களை பற்றி தெரியாது. எங்கள் வீட்டிற்கு கேபிள் டிவி இணைப்பு கொடுத்தவரை மட்டும் தெரியும். போலீசார் என்னை இது வரை விசாரிக்கவில்லை. இன்று எதற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்று தெரியாது.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் விசாரித்தனர் என்றும், அவர்கள் விசாரணையின் போது 4.8.2007 அன்று சனிக்கிழமை கேபிள் டி.வி அமைப்பிற்கும், செல்வா என்ற எனது நண்பருடன் அவர் வியாபாரம் செய்யும் இடங்களுக்கு செல்வேன் என்றும், அவ்வாறு சென்ற போது 4.8.2007 அன்று செல்வா மோட்டார் சைக்கிளில் நானும் அவருடன் அரசு மருத்துவமனைக்கு செல்ல சக்தி நகர் வழியாக செல்வதற்கு மங்கம்மாள் சாலைக்கு மேல் பக்கம் காட்டுப்பாதை வழியாக சென்று கொண்டிருந்த போது ஹனிபாவும், அப்துல்லாவும் அலாவூதினுடன் வந்து கொண்டிருந்தார்கள் என்றும், இதை பார்த்ததும் செல்வா பயந்து போய் மோட்டார் சைக்கிளின் முகப்பு விளக்கை அனைத்து விட்டு தெற்கு பகுதியில் இருட்டான இடத்தில் நாங்கள் இருவரும் பதுங்கி நின்றுகொண்டோம் என்றும், சிறிது தூரத்த்தில் மூவரும் தனியே நின்று பேசிக்கொண்டிருநதார்கள் என்றும், அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது ஷேக்கானை கடைவீதியில் தாக்க முயற்சித்துள்ளார்கள் என்றும், எனவே குமார்பாண்டியனை முடித்து விட்டதால் பிரச்சனை முடிந்தது என்று நினைத்தால் தற்போது செந்தில், சுரேந்திரன், கபிலன் தலை தூக்கி

விட்டார்கள் என்றும், அவர்களையும் முடித்துவிட வேண்டும் என்றும், செவ்வாய் கிழமை சக்திபாண்டியன் காலை 10.00 மணிக்கு மேல் பஜாரில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கும், மேலமுத்தராம்மன் கோவிலுக்கும் சாமி கும்பிட வருவார் என்றும், தெற்கு பகுதியில் சாலை குறுகலாக உள்ளதால் அங்கும் இங்குமாக செல்லவிடாமல் மறித்துவிட வேண்டும் என்றும் பேசிக் கொண்டிருந்தார்கள். முக்கியமான விஷயங்களை பேச வேண்டும் என்றால், இங்கே வந்து பேசலாம் மற்ற விஷயங்களை வீட்டில் வைத்து பேசிக்கொள்ளலாம் என்று கூறிவிட்டு சென்றார்கள் என்றும், இதை இருட்டு மறைவில் இருந்து நானும் செல்வாவும் கேட்டோம் என்றும், நாங்கள் கேள்விப்பட்ட தகவலை சக்திபாண்டியன் மற்றும் செந்திலிடம் கூறினோம் என்றும், ஆனால் அவர்கள் எங்கள் எச்சரிக்கையை கேட்கவில்லை என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால், சரியல்ல. சக்திபாண்டியன் எதிரியாக உள்ள வழக்கில் நான் சாட்சி அல்ல. குமார்பாண்டியன் எனது உறவினர். சக்திபாண்டியன் வழக்கில் எதிரிகளுக்கும், சக்திபாண்டியனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் காரணமாக சக்திபாண்டியனை வழக்கில் இருந்து காப்பற்றுவதற்காக இவ்வழக்கில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குமார்பாண்டியன் கொலை வழக்கில் நான் சாட்சி என்றால், சரிதான். குமார்பாண்டியன் கொலை செய்யப்பட்டு இறந்தார் என்ன காரணத்திற்காக கொலை செய்யப்பட்டார் என்று தெரியாது. குமார்பாண்டியன் இறுதி சடங்கு நடைபெற்றது அதில் நானும் கலந்து கொண்டேன். சக்திபாண்டியன் சகோதரர்களும் கொலை செய்யப்பட்டு இறந்தார்கள் என்று கேள்விபட்டேன். என்ன காரணத்தினால் இறந்தார்கள் என்று தெரியாது. குமார்பாண்டியன் எனது சொந்த அத்தை மகன்.

குமார்பாண்டியன் இறந்த பின்னர் அவரது சகோதரர்களை அடிக்கடி சந்தித்து பேசிக்கொண்டேன். குமார்பாண்டியன் இறந்த பிறகு எனக்கு 14.6.2007 அன்று திருமணம் ஆனது. அதன் பின்னர் தான் சக்திபாண்டியன் சகோதரர்கள் கொலையுண்டு இறந்து போனார்கள். குமார்பாண்டியன் இறப்பிற்கு வருடம் தோறும் நினைவஞ்சலி நடந்து வருகிறது, நான் அதில் கலந்து கொள்ளவில்லை, அதை பற்றி என்று கேள்விபட்டேன். நான் எனக்கு தெரிந்த தகவலை வேண்டுமென்றே மறைத்து பொய் சாட்சி கூறுகிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**